வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.10.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 275 | பக்கங்கள் : 12

# இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்து பங்களிக்கும்

## தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் இந்தியத் தூதுவர்

கொழும்பு, ஒக்ரோபர் 01

**“ஜனாதிபதி அநுரகுமாரவுடன் இணைந்து நாம் பணியாற்றுவோம். இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும்”, என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை பெரிய விமானங்களும் தரையிறங்கக்கூடிய வகையில் விஸ்தரிப்பதற்கு இந்தியா ஆதரவளிக்கும். இதேபோன்று, மன்னார் - இராமேஸ்வரம் படகு சேவையை விரைவாகத் தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார்.

இந்தியத் தூதுவரிடம் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள்,

தற்போதைய அரசாங்கம் அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவே கடந்த காலங்களில்

11

# ஐ. எம். எவ். குழுவினர் நாளை வருகின்றனர்

கொழும்பு, ஒக். 01

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) குழு ஒன்று நாளை புதன்கிழமை இலங்கை வரவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்காகவும் - மூன்றாம் கட்ட கடன் கொடுப்பனவு தொடர்பில் மீளாய்வு செய்வதற்காகவுமே இந்தக் குழு இலங்கை வருகின்றது.

முன்னதாக நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை

11

# தமிழ் மக்கள் கூட்டணி தனித்தே களமிறங்கும்

## முதன்மை வேட்பாளர் அருந்தவபாலன்

யாழ்ப்பாணம், ஒக். 01

தமிழ் மக்கள் கூட்டணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தனது மான் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவது என்று நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடிய அந்தக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன், அந்தக் கட்சியை சேர்ந்த க. அருந்தவபாலனை யாழ். மாவட்டத்தில் முதன்மை

11

# சங்குதான் எம் சின்னம்! முடிவில் மாற்றமில்லை!!

## பொதுக்கட்டமைப்பின் விருப்பும் அதுவே ரெலோவின் செயலாளர் நாயகம் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 01

“குத்துவிளக்குச் சின்னத்திற்குப் பதிலாக, சங்கு சின்னத்தைப் பயன்படுத்த முயற்சிகளை எடுகின்றோம். சங்கு சின்னத்தை தவிர்க்கக் கோரும், தமிழ் மக்கள் பொதுச் சபையின் தீர்மானம் ஏகமனதானதல்ல.”

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் செப்ரெம்பர் 26 தீர்மானத்திற்கு அமைய சங்கு சின்னத்தைப் பெறுவோம் எனவும் அவர்

11

# கைக்குண்டுகளுடன் 2 இளைஞர்கள் கைது

- பா.பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஒக். 01

கைக்குண்டுகள் மற்றும் வாள்களுடன் இளைஞர்கள் இருவரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் மானிப்பாயைச் சேர்ந்த 18, 24 வயது இளைஞர்களாவர். நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவர் நவாலி பகுதியிலும் மற்றையவர் மட்டக்களப்பு பகுதியிலும் தலைமறைவாக இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களைக் கைதுசெய்தபோது அவர்களிடமிருந்து, 2 கைக்குண்டுகள், 4 வாள்கள், 4

11

# கட்சியின் முடிவுக்கு மாறாக நடந்தோருக்கு இடமில்லை!

## சுமந்திரன் எம். பி. வெளிப்படை

மன்னார், ஒக். 01

கட்சியின் முடிவுகளுக்கு எதிராக செயல்பட்டோருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படமாட்டாது. பாராளுமன்றத்தில் (தற்போது கலைக்கப்பட்ட) இருந்தவர்களானாலும் கட்சி ஒழுக்கநெறிகளுக்கு ஏற்ப நடந்து கொண்டவர்களுக்கு

11

# சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஜெனிவா பயணமாகின்றனர்!

கொழும்பு, ஒக். 01

இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தை மீண்டும் காலநீடிப்பு செய்யக்கோரி பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டுள்ள வரைவை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்புடன் நிறைவேற்றவேண்டிய நிலை ஏற்படலாம். எனவே, அதற்கான ஆதரவை கோரி உறுப்புநாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக இலங்கையை தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூகப் பிரதி நிதிகள் சிலர் இந்த வாரம் ஜெனிவா செல்லவுள்ளனர்.

11

# கீரிமலை - கொழும்பு பஸ் சேவை இன்றுமுதல்!

- எஸ். தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக். 01

கீரிமலையிலிருந்து பருத்தித்துறை ஊடாக கொழும்புக்கான பேருந்து சேவை இன்று செவ்வாய்க்கிழமை முதல் மீள ஆரம்பமாகிறது.

தினமும் இரவு 7.15 மணிக்கு கீரிமலையில் இருந்து சேவையை தொடங்கும் பேருந்து காங்கேசன்துறை - மயிலிட்டி - தொண்டைமானாறு - வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையை அடைந்து இரவு 9 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு

11

# தேசிய பட்டியல் எம். பி. பதவியை அரியத்துக்கு வழங்குவதே அறம்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சி

- கோகுலன் -

வவுனியா, ஒக். 01

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பாக போட்டியிடும் நாங்கள் எமக்குக் கிடைக்கும் முதலாவது தேசியப் பட்டியல் எம். பி. பதவியை அரியநேத்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறம் - இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் க. துளசி தெரிவித்துள்ளார்.

11

# ராஜபக்ஷர்கள் திருடர்கள் என்றால் உண்மைத்தன்மையை நிரூபியுங்கள்

## தேசிய மக்கள் சக்தியிடம் கேட்கிறார் சாகர

கொழும்பு, ஒக். 01

ராஜபக்ஷர்கள் திருடர்கள் என்றால் உடனடியாக சட்டத்தை அமுல்படுத்தி அதன் உண்மைத்தன்மையினை நிரூபிக்குமாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அரசியல்வாதிகள் திருடர்கள், ஊழல்கள் துஷ்பிரயோகங்கள் மலிந்துள்ளன, இதனால் தான் இந்நாடு முன்னோக்கிச் செல்லாது பின்னடைவையே சந்திக்கின்றது என்றெல்லாம் மக்கள் விடுதலை முன்னணியினர் தொடர்ந்தும்

11

சாதாரண தர பெறுபேறு:

# வடக்கில் வேம்படி முன்னிலை 114 மாணவிகளுக்கு 9ஏ சித்தி!

யாழ்ப்பாணம், ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 114 மாணவிகள் 9ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

சாதாரண தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்திலேயே அதிக 9ஏ சித்திகளைப் பெற்ற பாடசாலை என்ற பெருமையையும் அந்தக் கல்லூரி பெற்றுள்ளது.

இதேபோன்று, 42 மாணவிகள் 8ஏ, பெறுபேற்றையும் 32 மாணவிகள் 7ஏ பெறுபேற்றையும்

11

# ஓ.எல். பரீட்சை 2025 மார்ச்சில்!

கொழும்பு, ஒக். 01

2024ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை 2025 மார்ச் மாதத்தில் நடத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் நடைபெறும் திகதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்று பரீட்சைகள்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

சில வாரங்களாக இந்தப் பத்தியை எழுதாமலே விட்டு விட்டு, நேற்றைய தினம் எழுதத் தொடங்கியதும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு கிடைத்த வாக்குகள் பற்றியும் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்த வாக்குகள் பற்றியும் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு தொலைபேசியில் பேசிய நண்பர் ஒருவர், நமது முன்னணியினரின் பகிஷ்கரிப்பு பற்றி எழுதாமல் விட்டுவிட்டீர்களே என்று குறைபட்டுக்கொண்டார்.

உண்மைதான், தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே தமது முடிவை முதன்முதலில் அறிவித்தவர்கள் முன்னணியினர்தான். தமது வழமையான பகிஷ்கரிப்பு கோரிக்கையை வெளியிட்டு பிரசாரத்தை முதலிலேயே தொடக்கியவர்களும் அவர்கள்தான்.

நீண்டகாலம் நாட்டில் இல்லாமல் இருந்துவிட்டு தாயகம் திரும்பியிருந்த முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தான் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், இந்தத் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றி அழுத்தம்திருத்தமாக சில விடயங்களைச் சொன்னார்.

"இந்தப் பொதுவேட்பாளரின் பின்னால் இருக்கின்ற சக்திகள் எல்லாமே ஒற்றையாட்சியின் கீழ் இந்த பதின்மூன்றாவது திருத்தத்தை ஆதரிக்கின்ற தரப்புகள்தான். அந்தத் தரப்புகள் ஒரு வேட்பாளரை நிறுத்தி தமிழ்த் தேசியவாதம் என்ற ஒன்றைக் காட்டி, அவர்கள் உண்மையிலேயே என்ன செய்கிறார்கள் என்றால் தமிழ்த் தேசியத்தை கைவிடப்பண்ண முயல்கிறார்கள்." என்று சொன்னார்.

அதே தலைவர்தான் தேர்தல் முடிந்த பின்னனர், "தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவையே", என்றார்.

அது சரியானதுதான். அதில் மாற்றுக்கருத்துகள் இருக்கமுடியாது. ஆனால், தேர்தலுக்கு முன்னர் தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ்த் தேசியத்தின் பெயரில் களமிறக்கப்பட்டுள்ளாரே தவிர, அதன் பின்னணியில் தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கான திட்டம் இருக்கின்றது - என்றவர், தேர்தல் முடிந்த பின்னர் அது தேசியத்துக்கானது என்கிறார் என்றால், அவர் முதலில் சொன்னது தவறானதாக இருக்க வேண்டும் அல்லது அவர் சொன்னதை தமிழ் மக்கள் நம்பவில்லை என்றாக இருக்கவேண்டும்.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது.

தமிழ் வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவை என்றவர், முப்பது வீதமான தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரித்திருக்கின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

அதாவது இந்தத் தேர்தலை தமிழ் மக்களில் முப்பது வீதமானவர்கள் பகிஷ்கரித்திருக்கின்றனர் எனவும் தமது கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்ககிறார்.

இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் மாத்திரமல்ல, முப்பது வீதத்திற்கும் அதிகமான சிங்கள மக்களும்தான் பகிஷ்கரித்திருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு தொடங்கியதிலிருந்து வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே இருந்தது. இதனை அவதானித்த ஊடக நண்பர் ஒருவர், குறுந்தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார்.

"முன்னணியினரின் பகிஷ்கரிப்பு கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் போலும்" என்று.

அவருக்கு பதில் எழுதினேன், "இன்று சனிக்கிழமை. சந்தைக்கு சென்று மீன் வாங்கி, சமைத்து சாப்பிட்டுவிட்டுத்தான் வாக்களிக்க வருவார்கள் கொஞ்சம் பொறுங்கள்" என்று.

வாக்களிப்பு முடிந்த பின்னர் அவர் மீண்டும் குறுந்தகவல் அனுப்பினார்: "பார்த்தீர்களா? அறுபத்திஐந்து வீதம்தான் வாக்களித்திருக்கின்றது" என்று.

உண்மைதான், கடந்த தேர்தலில் அறுபத்தி எட்டு வீதமானவர்கள் வாக்களித்திருந்தார்கள். இந்தத் தடவை மூன்று வீதமானவர்கள் குறைந்திருக்கிறார்கள். வாக்களித்தவர்களில் மூன்று வீதம் என்பது அண்ணளவாக பதினைந்தாயிரம் பேர் வாக்களிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி முதன்முதலில் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தலில் முன்னணியினர் போட்டியிட்டபோது அவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் அண்ணளவாக அதே தொகைதான். பின்னர் பதினைந்தில் போட்டியிட்ட போதும் அதேதொகைதான். ஆனால், இருபதாம் ஆண்டு அவர்கள் ஐம்பதாயிரம் வாக்குகளை பெற்றது அவர்களின் கொள்கைகளால் கவரப்பட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. நல்லாட்சி காலத்தில் அரச பங்காளிக் கட்சிகள்போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்பட்டதால் அவர்கள் மீதிருந்த வெறுப்பில்- அவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் போட்டதால் கிடைத்ததுதான் அந்த ஐம்பதாயிரம் வாக்குகள்.

ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் பகிஷ்கரிப்பு கோரிக்கைக்கு கிடைத்திருக்கும் பதினையாயிரம் வாக்குகளும் - அதாவது அவர்களின் நிஜ ஆதரவாளர்களின் எண்ணிக்கை இன்னமும் அப்படியேதான் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்தக் கணக்கை அந்த ஊடக நண்பருக்கு எழுதிய பின்னர் அவரிடமிருந்து பதில் வந்தது. ஒரு விரலை தூக்கி காட்டி சைகை மூலம் பதிலளித்திருந்தார்.

- ஊர்க்குருவி

## பருத்தித்துறை ஹாட்லியில் 32 மாணவர்களுக்கு 9ஏ சித்தி!

வடமராட்சி, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் 32 மாணவர்கள் 9 பாடங்களில் விசேட சித்தியான ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர். 9 ஏ பெற்றவர்களில் 17 மாணவர்கள் தமிழ் மொழி மூலமும் 15 மாணவர்கள் ஆங்கில மொழி மூலமும் பரீட்சைக்கு தோற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று 28 மாணவர்கள் 8 ஏ, பெறுபேற்றை பெற்றுள்ளனர். இதில், 20 மாணவர்கள் தமிழ் மொழி மூலமாகவும் 8 மாணவர்கள் ஆங்கில மொழி மூலமாகவும் பரீட்சைக்கு தோற்றியவர்களாவர்.

இந்தப் பாடசாலையில் 154 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அனைவரும் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## வடமராட்சி இந்து மகளிரில் மூன்று மாணவிகளுக்கு 9ஏ

வடமராட்சி, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் மூன்று மாணவிகள் 9ஏ சித்திகளை பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் உயர்பெறுபேறுகளை பெற்றவர்களின் விவரம் வருமாறு,

ஜெ. துர்க்கா, ச. சுவர்த்திகா, ம. தேனுஜா ஆகியோர் 9ஏ பெறுபேற்றை பெற்றனர். சி. துஷிந்தா 8ஏ, பி, ப. கர்ணவி 8ஏ, சி, ரா. அபிநயா 8ஏ, எஸ், பா. பிரவீனா 7ஏ, பி, சி, செ. திகழ்சுரபி 6ஏ, 3 பி, சி. தீபிகா 6 ஏ, பி, சி, எஸ், ந. சுகர்மிகா 6ஏ, 2 சி, எஸ், க. அனுசியா 5ஏ, 4 பி, ரா. வானதி 5ஏ, 3பி, சி, ப. காவியா, ரா. திவ்யா, சி. தனுஷியா 5ஏ, 2பி, 2 சி, பா. சௌமியா 5ஏ, பி, 3சி பெறுபேறுகளை பெற்றுள்ளனர். (ஐ-02)

## கொக்குவில் இந்துவில் 7 மாணவர்களுக்கு 9ஏ

யாழ்ப்பாணம், ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 7 பேர் 9 பாடங்களில் விசேட சித்தியான ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

இதேபோன்று 22 மாணவர்கள் 8ஏ பெறுபேற்றையும் 21 மாணவர்கள் 7ஏ பெறுபேற்றையும் 18 மாணவர்கள் 6ஏ பெறுபேற்றையும் 16 மாணவர்கள் 5ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். (ஐ)

## நெல்லியடி மத்தியில் 7 மாணவர்களுக்கு 8ஏ

வடமராட்சி, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் நெல்லியடி மத்திய கல்லூரியில் 7 பேர் 8 பாடங்களில் விசேட சித்தியான ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர். இதில் இருவர் ஆங்கில மொழி மூலமாக பரீட்சைக்கு தோற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று 3 மாணவர்கள் 7ஏ பெறுபேற்றையும் 3 மாணவர்கள் 6ஏ பெறுபேற்றையும் பெறுபேற்றையும் 3 மாணவர்கள் 5 ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளனர்.

அத்துடன், இந்தப் பாடசாலையில் 121 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 100 பேர் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## வடமராட்சி கிழக்கில் இரு மாணவருக்கு 9ஏ

யாழ்ப்பாணம் ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் வடமராட்சி கிழக்கு மாணவர்கள் இருவர் 9ஏ பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

ஆழியவளை சி. சி. த. த. க. பாடசாலையில் ஒருவரும் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் ஒருவருமாக இருவர் 9ஏ சித்தியை பெற்றுள்ளனர். (ஐ-2)

## பருத்தித்துறை மெதடிஸில் 26 மாணவிகள் 9ஏ சித்தி!

வடமராட்சி, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் பருத்தித்துறை மெதடிஸ் உயர்தர பெண்கள் பாடசாலையில் 26 மாணவிகள் 9 பாடங்களில் விசேட சித்தியான ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

இதேபோன்று 19 மாணவிகள் 8ஏ, பி பெறுபேற்றையும் 08 மாணவிகள் 8ஏ, சி பெறுபேற்றையும் 12 மாணவிகள் 7ஏ, 2பி பெறுபேற்றையும் 5 மாணவிகள் 7ஏ, பி, சி பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். (ஐ-02)

## யாழ். மத்திய கல்லூரியில் இருவருக்கு 9ஏ பெறுபேறு

யாழ்ப்பாணம், ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் 9 பாடங்களில் ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

முஹமட் சிபான், கோ. ஆகாஷ் ஆகியோரே 9ஏ பெறுபேற்றை பெற்றனர்.

ம. கஜப்பிரியன் 8ஏ, பி, ஜீ, ஜதுமிதன் 8ஏ, சி, மு. கஜரதன் 7ஏ, பி, சி, சி. ஆகாஷ் 7ஏ, பி, சி, கி. ஜான்சன் வசந்தன் 7ஏ, பி, சி, பி, ஜூட் ஜெனிஸ்ரன் 7ஏ, பி, சி, ஹா. நிலக்ஷன் 6ஏ, 2பி, சி, மௌ. விதுர்ஜியன் 6ஏ, 2பி, சி, சு. விபூசன் 6ஏ, பி, 2சி, ர. தஜூசன் 5ஏ, 2சி, 2எஸ், கு. துஷான் 5ஏ, 3பி, சி பெறுபேறுகளை பெற்றுள்ளனர். (ஐ)

## உடுவில் மகளிரில் 6 மாணவிகளுக்கு 9ஏ

யாழ்ப்பாணம், ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் ஆறு பேர் 9ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

அகநிலா சதீஸ்குமார், டிரோஷினி சிவகுமார், தாருணி மணிவண்ணன், ஜாஸ்மிகா ஆனந்தராஜா, தரண்ஜா கோபிநாத், செநூரி நிரஞ்சர் ஆகியோரே 9ஏ பெறுபேற்றை பெற்றவர்களாவர்.

இதேபோன்று, 7 மாணவிகள் 8 ஏ பெறுபேற்றையும் 9 மாணவிகள் 7ஏ பெறுபேற்றையும் 4 மாணவிகள் 6ஏ பெறுபேற்றையும் 5 மாணவிகள் 5ஏ பெறுபேற்றையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இறம்பைக்குளம் ம. வி.யில் 25 மாணவர்களுக்கு 9ஏ

வவுனியா, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் 25 பேர் 9 பாடங்களில் விசேட சித்தியான ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

தொடர்ச்சியாக பாடசாலையின் பெறுபேறுகளில் மாணவர்கள் உயர்வை வெளிப்படுத்தி வரும் நிலையில் தற்போதும் அதிகளவான மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தியை பெற்றுள்ளனர். அத்துடன், 16 மாணவர்கள் 8 பாடங்களில் விசேட சித்தியை பெற்றள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்தார். (ஐ-10)

## முழங்காவில் ம. வியில் இருவருக்கு 9ஏ பெறுபேறு!

கிளிநொச்சி, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இரு மாணவர்கள் 9ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

ஜெ. சமர்வாணன், ம. தாருசா ஆகியோரே 9ஏ பெறுபேற்றை பெற்றனர். அ. எழிலன், ஆ. ஆதித்ய நிலா, வி. கோபிகா ஆகியோர் 8ஏ, பி, ரா. கோமகள், ச. சாலினி 8ஏ, சி, பை, லிங்கேஸ்வரன், சி. அலைமகள் 8ஏ, எஸ் சித்தியையும் பெற்றுள்ளனர்.

க. சங்கவி 7ஏ, 2சி, அ. மதுரிகா, உ. செயல்விழி 6ஏ, 3பி, கு. ஆதுரியா 6ஏ, பி, சி, எஸ், சு. சங்கவி, தா. விதுர்சாயினி 5ஏ, 2பி, 2சி, க. பிருந்தன் 5ஏ, 2பி, 2எஸ், இ. சதுர்சன், சு. மேரிசுபாசினி 5ஏ, 3பி, 1எஸ், மு. தமிழ்க்கீரன் 5ஏ, 2பி, சி. எஸ், அ. கனிநிலை 5ஏ, 2பி, சி பெறுபேற்றை பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.10.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீண்டும் பூச்சியத்திலா?

தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் அடிப்படையில் வடக்கு - கிழக்கை சேர்ந்த பல பொதுமக்கள் அமைப்புகளும் தனிநபர்களும் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் பொதுச் சபையை உருவாக்கியிருந்தனர். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் நோக்கிலேயே தமிழ் மக்கள் பொதுச் சபையின் தோற்றம் நிகழ்ந்தது. தமிழ் கட்சிகளின் பங்குபற்றலின்றி தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றி பெற்றிருக்காது. தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டின் வெற்றியில் சிவில் சமூகத்துக்கு எந்தளவு பங்கிருக்கின்றதோ - அதேயளவு பங்கு பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழ்க் கட்சிகளுக்கும் உண்டு.

கட்சிகளும் சிவில் சமூகமும் ஒன்றிணைந்ததே தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்ப் பொதுக்கட்டமைப்புக்கு உரிமை கோரும் தகுதி இரண்டு தரப்புகளுக்கும் உண்டு. ஒருவேளை, ஒரு தரப்பு தன்னிச்சையாக வெளியேறினாலும்கூட கட்சிகள் பொதுக் கட்டமைப்பாக இயங்க முடியும். கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையின் உறுப்பினர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை எவருமே தன்னிச்சையாகக் கலைக்க முடியாது. ஆனால், விலகிச் செல்லலாம்.

நிலைமை இவ்வாறிருக்க தமிழ் மக்கள் பொதுச் சபை பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்னும் முடிவை எடுத்திருப்பதுடன், பொது வேட்பாளருக்கு பயன்படுத்திய சங்கு சின்னத்தை கட்சிகள் பயன்படுத்தக்கூடாதென்றும் வலியுறுத்தியிருக்கின்றது. சங்கு சின்னத்தை கட்சிகள் பயன்படுத்தக் கூடாதென்னும் உடன்பாடு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கட்டாய நிபந்தனையாக இல்லை. அத்துடன், இரண்டு தரப்புகளும் தொடர்ந்தும் பயணிப்பதென்றும் உடன்பாட்டில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், எந்த அடிப்படையில் பயணிப்பது என்பது உடன்பாட்டில் இல்லை. இந்தப் பின்புலத்தில், சங்கு சின்னத்தை கட்சிகள் பயன்படுத்துவதும்கூட அரசியல்ரீதியில் தவறான விடயமல்ல. ஏனெனில், அதற்கான வாய்ப்பை புரிந்துணர்வு உடன்பாடு கொண்டிருக்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டதன் மூலம் நீண்டகாலமாக ஒன்றுபட முடியாமல் - ஒன்றுபடுத்துவதற்கான பக்கபலமின்றி இருந்த கட்சிகள் ஒன்றுபடும் வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக ஒன்றுபட்டனர். ஆனால், தமிழ் மக்கள் பொதுச் சபையின் தான்தோன்றித்தனமான முடிவால் திரட்சி பெற்ற ஒற்றுமை உடைவுற்றிருக்கின்றது. மீண்டும் பழைய நிலைக்கு கட்சிகள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி சிறுபிள்ளை வேளாண்மைபோல் ஆகியிருக்கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபையின் தீர்மானம் ஒரு வரலாற்றுத் தவறாகும். அந்த சபையில் அங்கம் வகிக்கும் அனைவரும் இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.

அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. அது தோல்வியில் முடிவுற்றது. மீண்டும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கும் சிவில் சமூக முயற்சி தோல்வியில் முடிவுற்றிருக்கின்றது. சிவில் சமூக அமைப்புகளின் எல்லை தெரியாது மேற்கொள்ளப்படும் முயற்சியின் விளைவாகவே இதனை நோக்க வேண்டும். தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் பெயரில் மீண்டும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். இதற்குக் கட்சிகள் பொறுப்பல்ல மாறாக, சிவில் சமூக அமைப்புகள் என்போரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

# 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்தக் கோரிப் போராட்டம்!

### கல்வி அமைச்சு முன்பாக பெற்றோர் முன்னெடுப்பு

கொழும்பு, ஒக். 01

அண்மையில் நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் 3 வினாக்கள் வெளியானதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையைக் கருத்திற் கொண்டு கல்வி, விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர்கள் கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று போராட்டத்தை ஆரம்பித்தனர்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,849 பரீட்சை நிலையங்களில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. 323, 879 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி 1 வினாத்தாளில் 3 வினாக்கள் கசிந்தமை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும், கசிந்ததாகக் கருதப்படும் கேள்விகளுக்கான புள்ளிகளை முழுமையாக வழங்குவதற்கு பரிந்துரைத்துள்ளது.

மேலும், மீண்டும் பரீட்சை நடத்தப்பட மாட்டாது என்று, கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வடக்கு விவசாய கண்காட்சி நாளை முதல் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஒக். 01

வட்க்கு மாகாணம் தழுவிய விவசாய கண்காட்சி நாளை புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை திருநெல்வேலியில் நடைபெறவுள்ளது.

மேலும், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் "சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி," எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு விவசாயக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. அத்துடன், 30இற்கும் மேற்பட்ட விடயத் தலைப்புக்களை உள்ளடக்கியதாக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அஞ்சனா சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஒக். 01

சாதாரண தரப் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் இன்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரர்கள் மற்றும் 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப்பதாரர்கள் உட்பட சுமார் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

க. பொ. த. சாதாரண தரப் பெறுபேறுகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வெளியாகின.

இதில், நாடளாவிய ரீதியில் முதலிடத்தை காலி சங்கமித்த பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஹிருணி மல்ஷா குமாரதுங்க பெற்றார். இரண்டாவது இடத்தை கொழும்பு மியூசியஸ் கல்லூரியின் குலானி மெத்சரா, குருநாகல் மலியதேவ பெண்கள் கல்லூரியின் விமன்சா ஜயனாதி ரத்னவீர ஆகியோர் பெற்றனர்.

மூன்றாவது இடத்தை கொழும்பு விஷாகா மகளிர் கல்லூரியை சேர்ந்த சேஷ ஆனி செஹன்சா ஜயவர்த்தன, நுகேகொட அனுலா கல்லூரியைச் சேர்ந்த மெதுகி சாமோதி பெரேரா மற்றும் காலி சங்கமித்த பெண்கள் கல்லூரியின் நடுனி பமுதித ரணவக்க ஆகிய மூன்று மாணவிகள்பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)


## வட்டு. இந்து கல்லூரி மாணவனுக்கு 9ஏ

யாழ்ப்பாணம் ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி மாணவன் 9ஏ சித்தியை பெற்றுள்ளார்.

கேதீஸ்வரன் கேசவன் என்ற மாணவனே 9 பாடங்களிலும் ஏ பெறுபேற்றை பெற்றுள்ளார். (ஐ-2)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் - 01 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 15
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புதுபங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். உறவினர், விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். அசதி சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**துலாம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்.

# “ஒரே குடும்பத்தில் முதல்வர் துணை முதல்வர் புதிதல்ல”

## கார்த்தி சிதம்பரம் எம். பி. கருத்து

புதுக்கோட்டை, ஒக். 01

“ஒரே குடும்பத்தில் ஒருவர் முதல்வராவதும், மற்றொருவர் துணை முதல்வராவதும் புதிதல்ல” என்று சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு, “ஒரு குடும்பத்தில் இருந்து பலர் அரசியல் பதவிக்கு வருவது புதிதல்ல. பல மாநிலங்களில், பல கட்சிகளில் நிகழ்ந்துள்ளது. அதுபோன்று, ஒரே குடும்பத்தில் ஒருவர் முதல்வராவதும், மற்றொருவர் துணை முதல்வராவதும் புதிதல்ல.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் அமைச்சரவையில் யாரை வேண்டுமானாலும் அமைச்சராக்கவும், பதவிகளை மாற்றிக் கொடுக்கவும், நீக்கவும் முழு அதிகாரம் பிரதமர், முதல்வர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில்தான் தமிழகத்திலும் அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது”- என்றார். (எ)

# “தி. மு. கவில் உழைத்தோருக்கு தலைமைப் பதவி கிடைக்காது”

## பா. ஜ. க. ராஜா கடும் சாடல்

காரைக்குடி, ஒக். 01

“தி. மு. கவில் உழைத்தவர்களுக்கு தலைமைப் பொறுப்பில் இடம் கிடைக்காது” என்று பா. ஜ. க. மாநில ஒருங்கிணைப்புக் குழு தலைவர் எச். ராஜா தெரிவித்தார்.

காரைக்குடியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு, “தி. மு. கவில் கருணாநிதி குடும்பத்தைத் தவிர தலைமைப் பொறுப்புக்கு யாரும் வர முடியாது என்பது உதயநிதியை துணை முதல்வராக்கியது மூலம் அறிய முடிகிறது.

நீதிமன்றத்தால் கண்டிப்பாக செந்தில் பாலாஜி தண்டிக்கப்படுவார். அவர் மீதான விசாரணை நிலுவையில் இருக்கும் போது அமைச்சராக்கியுள்ளனர். பா. ஜ. கவில் எப்போதும் மோடி அணி மட்டும்தான். எங்களுக்கு தி. மு. க., அ. தி. மு. க. ‘பி’ அணியாக இருக்க வேண்டாம்”- என்றார். (எ)

# மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப அனைவரும் செயல்பட வேண்டும்

## துணை முதல்வர், அமைச்சர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, ஒக். 01

“தமிழக மக்களின் நம்பிக்கையை காக்கும் வகையில் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்” என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

துணை முதல்வர் மற்றும் புதிய அமைச்சர்களுக்கு வாழ்த்து தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.




“அரசும், பொறுப்பும், தலைமையும், முதல்வரின் செயல்களும் கூட்டுப் பொறுப்பு என்பதை உணர்ந்தவன் நான். அதன்படியே செயல்படுபவன். மூன்றாண்டு வளர்ச்சிக்கு தமிழக அமைச்சர்கள் அனைவரும் பங்களித்துள்ளனர். இதன் இன்னொரு கட்டமாகவே துணை முதல்வராக உதயநிதி நியமிக்கப்பட்டுள்ளார்” என்றும் விளக்கமளித்துள்ளார். (எ)

# தி. மு. கவில் வாரிசு அரசியல் நிரூபணம்

## அ. தி. மு. கவின் சட்டமன்ற உறுப்பினர் விமர்சனம்

கோவில்பட்டி, ஒக். 01

“உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளதன் மூலம் தி. மு. கவில் வாரிசு அரசியல் நடப்பது நிரூபணமாகி விட்டது” என்று அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜூ தெரிவித்தார்.

கோவில்பட்டியில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

“அமைச்சரவையில் இருந்து ஓர் அமைச்சர் விடுவிக்கப்படுகிறார் என்றால், அவர் மீது ஏதாவது குற்றச்சாட்டு இருக்க வேண்டும். இல்லையென்றால் துறை ரீதியாக ஒரு பிரச்னையை அவர் எதிர் கொண்ட நேரத்தில் அவர் விடுவிக்கப்படுவது வழமை. ஆனால், அமைச்சராக இருந்த மனோ தங்கராஜ் விடுக்கப்பட்டதன் மர்மத்துக்கு முதல்வர் தான் பதிலளிக்க வேண்டும்.

ஸ்டாலினால் தி. மு. கவையும் காப்பாற்ற முடியவில்லை, ஆட்சியையும் கொண்டு செல்ல முடியவில்லை என்பதை தான் உதயநிதியின் நியமனம் காட்டுகிறது. இதன்மூலம் தி. மு. கவில் வாரிசு அரசியல் நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் இது ஏற்றுக்கொள்ளக் கூடிய அம்சமாக இருக்காது என்பது எங்கள் கருத்து. இந்த அரசு மக்கள் விரோத அரசாக மாறிவிட்டது” - என்றார். (எ)

# “வாரிசு அரசியலை பா. ஜ. க. எதிர்க்கும்”

கோவை, ஒக். 01

“தி. மு. கவின் வாரிசு அரசியல் விவகாரத்தை மக்களிடம் பா. ஜ. க. தீவிரமாக எடுத்துச் செல்லும்” என்று பா. ஜ. க. தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் எம். எல். ஏ. தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“தி. மு. கவில் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் இருக்கும் போது உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி வழங்கியிருப்பது வாரிசு அரசியலை எடுத்துக் காட்டுகிறது”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் வேட்பாளர் நியமனத்தில் குழப்பம்!

கொழும்பு, ஒக். 01

**பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.**

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூவரை தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் இருவரும், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் ஒருவரும் ஐக்கிய மக்கள் சக்தி பட்டியலில் போட்டியிட்டனர்.

எனினும், இம்முறை தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் மூவர் நிறுத்தப்படவுள்ளனர் எனவும், இதற்கு இராதாகிருஷ்ணன் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

மலையக மக்கள் முன்னணியில் சார்பில் மூவரை நிறுத்துவதற்கு இராதாகிருஷ்ணன் தயாராகி வருகின்றார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை நிறுத்திய தேர்தல் ஆணைக்குழு!

கொழும்பு, ஒக். 01

நெற்செய்கையாளர்களுக்கு உயர் பருவத்தில் 25,000 ரூபா கொடுப்பனவும், மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியமும் வழங்குவதற்கான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தீர மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பொதுத்தேர்தல் அறிவிக்கப்படும் போது இவ்வாறான மானியத்தை வழங்க தீர்மானித்ததன் மூலம் ஏனைய வேட்பாளர்களின் பாதகத்தை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன்படி, பொதுத் தேர்தலின் பின்னர் உரிய பொதுக் கொள்கைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

ஆணைக்குழு நேற்று முன்தினம் கூடியபோது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 'மாற்றத்துக்கான இளையோர்' எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 01

"மாற்றத்துக்கான இளையோர்" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நேற்று முன் தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இளைஞர்களுக்கும், புதிய முகங்களுக்கும் வாய்ப்பளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங்களிலிருந்து இளைஞர்கள் பலர் கலந்து கொண்டார்.

இதன்போது சுயேச்சையாக இளைஞர்களை தேர்தலில் போட்டியிடவேண்டும் என இளைஞர்களால் வலியுறுத்தப்பட்டது.

ஆனாலும், இந்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முடிவு இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர்களை ஒன்று திரட்டி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க 7 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டதுடன், கட்சிகளுக்கு இளைஞர்களை உள்வாங்க அழுத்தம் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## புலமைப்பரிசில் வினாத்தாள் முறைகேடு;
# மாணவர்களுக்கு 3 வினாக்களுக்கு புள்ளிகளை வழங்குவது பொருத்தம்

கொழும்பு, ஒக். 01

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முறைகேடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் பரிந்துரையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி புலமைப்பரிசில் பரீட்சையின்போது கசிந்ததாகக் கூறப்படும் 3 வினாக்களுக்கு, பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் புள்ளிகளை

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

வழங்குவது பொருத்தமானது என குறித்த குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் குறித்த பரிந்துரைக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், வினாத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை விரைவில் ஆரம்பித்து தாமதமின்றி பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சையினை மீள நடத்துவது மாணவர்களின் மனநிலையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அந்த நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ரணிலால்தான் நாட்டில் இயல்பு நிலை ஏற்பட்டது!

## புகழ்கிறார் வேலுகுமார்

கொழும்பு, ஒக். 01

"ரணிலின் அத்திவாரத்திலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நகர்கிறது." - என்று கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கண்டி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

"ஜனாதிபதி தேர்தலின் பின் நாடு வழமைபோல இயங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் தளம்பல் இன்றி முன்செல்கின்றது. இந்நிலைமைக்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனவே இன்று ரணிலின் அத்திவாரத்திலேயே அரசாங்கம் நகர்கிறது." - எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் நலன் கருதி தூர நோக்குடன் செயற்பட்டிருந்தார். அந்த வகையில் முன்வரும் காலத்திற்கு நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் இருப்பு பேணப்பட்டு இருந்தது.

அதே போல அத்தியாவசிய பொருட்களின் தொடர்ச்சியான கொள்வனவுக்கு தேவையான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் நாடு சுமூகமாக முன்செல்கின்றது. அது மட்டுமின்றி சர்வதேச ரீதியாக மேற்கொள்ள வேண்டிய பேரம் பேசல்களும் முறையாக செய்யப்பட்டிருந்தது. அவற்றையும் ரணிலின் வழியில் முன்னெடுத்து செல்வதே இன்றைய அரசாங்கத்திற் குரிய செயற்பாடாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலை நடத்த மாட்டார் என சந்தேகம் தெரிவித்தார்கள். அவ்வாறு நடத்தி புதிய ஜனாதிபதி வந்தால் பொருளாதாரத்தை கொண்டு நடத்த முடியாதவாறு குழப்பி விடுவார் என்றார்கள். ஆனால்




அவை அனைத்தும் இன்று பொய்யாகி போய் உள்ளது. ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தப்பட்டது. ஆட்சியையும் ஜனநாயக ரீதியாக கையளிக்கப்பட்டது.

பொருளாதாரமும் ஸ்தீர தன்மையோடு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இவை எல்லாம் நாட்டையும், நாட்டு மக்களையும் நேசித்த தலைவர் ரணில் என்பதை உறுதிப்படுத்துகிறது. அதனை விடுத்து குறுகிய சுயலாப அரசியல் எண்ணத்தில் அவர் செயற்படுபவர் இல்லை என்பதும் நிரூபணமாகிறது"- என்றும் வேலுகுமார் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

# கொடிகாமத்தில் விபத்து; இரு வாகனங்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ்ப்பாணத்தில் ஹையஸ் ரக வாகனமும் கப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

குறித்த விபத்தில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்துள்ள நிலையில்,வாகனங்களில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், கொடிகாமம் - புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார் கப் ரக சாரதியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)



# 'யுக்திய' மறுசீரமைப்புடன் விரைவில் முன்னெடுக்கப்படும்

## பதில் பொலிஸ் மாஅதிபர்

கொழும்பு, ஒக். 01

'யுக்திய' நடவடிக்கையை அமுலாக்குவதிலுள்ள குறைபாடுகளை அவதானித்து, அவற்றை சீர்செய்து, சட்டத்தின் மூலம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வரென பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தலதா மாளிகைக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய பணிகளில் அமர்த்தப்பட்ட அதிகாரிகளை வழிநடத்துவதன் மூலம், அவர்கள் எதிர்காலத்தில் அதிக திறனுடன் செயல்படுவார்களென நம்புகிறேன். பொலிஸ் அதிகாரிகளில் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த பற்றாக்குறைக்கு மாற்று தீர்வாக, இதுவரை ஏனைய பணிகளில் அமர்த்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு பொதுப்பணியின், குறிப்பாக குற்றச்செயல்களை தடுக்கும் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனாதிபதி தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு உள்ளது

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 01

**புதிய ஜனாதிபதி தொடர்பில் தங்களது தரப்புக்கு சிறந்த புரிந்துணர்வு இருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



தெல்லிப்பளை - மாவைக லட்டி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் உரை யாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போதைய ஜனாதிபதி தொடர்பில் நல்ல புரிந்துணர்வு இருக்கிறது.

எங்களுடைய மக்களின் பிரச்னை தொடர்பில் நாங்கள் அரசாங்கத்துடன் கலந்துரையா டவுள்ளோம்.

எனினும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரே இந்த கலந்துரையாடல்களை ஆரம் பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஆரம்ப கால கட்டங்களில் ஜே.வி.பியான ஆயுதப் போட்டத்தில் ஈடுபட் டிருந்தது.

பின்னர் ஜனநாயக வழிக் குத் திரும்பி தற்போது ஆட் சியை கைப்பற்றியுள்ளது.

நாங்களும் ஆரம்பக் காலங் களில் ஆயுதம் ஏந்தி போராடி, பின்னர் ஜனநாயக வழியைத் தேர்வு செய்தோம்.

அவர்களும் நாங்களும் இட துசாரி பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள் என்ற அடிப்படை யில் இரு தரப்புக்கும் இடை யில் நல்ல புரிந்துணர்வு இருக் கிறது-என்றார். (அ)

# மதுபானசாலை அனுமதிக்கு 20 மில்லியன் ரூபாய் இலஞ்சம்!



கொழும்பு, ஒக். 01

சில மதுபானச்சாலை அனு மதிகளை வழங்குவதற்காக ஊழல்மிக்க கலால் திணைக்கள அதிகாரிகள் சிலர் அண்மையில் 20 மில்லியன் ரூபாய் வரை கோரியுள்ளதாக தேசிய மக்கள் சக்தி செயற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இவ்வாறாக அனுமதி வழங் கப்பட்ட மதுபானச்சாலைக ளின் தகவல்கள் தம்மிடம் இருப் பதாகவும் குறித்த ஊழல் மோச டிகள் தொடர்பான குரல் பதிவு கள் தங்களிடம் உள்ளதாகவும் வசந்த சமரசிங்க கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய சமரசிங்க, இலஞ் சம் கொடுக்க மறுத்தவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவ தற்கே குறித்த அதிகாரிகள் மறுத் துள்ளனர்.

"இந்த ஊழல் பேரங்கள் கார ணமாக அரசுக்கு பெரும் நட் டம் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த கலால் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளோம்" என்று சமரசிங்க கூறினார்.

இதேவேளை, மதுபான போத்தலில் போலி பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டி மோசடியில் ஈடுபட்ட கலால் திணைக்கள அதிகாரிகள் சிலர் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்ப தாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட வார இறுதியில் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

# விபத்துக்களில் மூவர் பலி!

கொழும்பு, ஒக். 01

மூன்று பிரதேசங்களில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் மூவர் உயிரிழந் துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மகாதெனிய, பலாலி மற்றும் இப்பாகமுவ பிரதேசங்களில் இந்த விபத்துக்கள் இடம்பெற் றுள்ளதாக பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை மீகொடை கொழும்பு பாதுக்கை 125 வீதியின் மஹாதெனிய பகு தியில் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திடீரென வீதியை நோக்கி செலுத்த முற்பட்டபோது பாதுக்கை திசையிலிருந்து கொடகம நோக்கி பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக் கிளுடன் மோதியதில் மோட் டார் சைக்கிள் ஒன்று வீதிக்கு அருகில் உள்ள கால்வாயில் விழுந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக் கிளில் பயணித்த இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி ஹோமாகம வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சாரதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 30 வயதுடைய பாதுக்கை பிரதேசத்தைச் சேர்ந் தவர் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன், நேற்று முன் தினம் காலை பருத்தித்துறை- காங்கேசன்துறை வீதியின் 36ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளை சாரதியால் கட்டுப் படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி, மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் சாரதியும், பின் னால் அமர்ந்து சென்றவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி தெல்லிப்பளை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட நிலை யில் சாரதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பலாலி பகு தியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும், இப்பாகமுவ மட கல்ல வீதியின் 05 ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகில், இப் பாகமுவ திசையிலிருந்து மட கல்ல திசை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று, முன்னால் அதே திசையில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதி யுள்ளது.

இவ்விபத்தில் சாரதியும், பின்பக்கத்தில் அமர்ந்து சென்ற வரும் பலத்த காயங்களுக்குள் ளானதுடன், குருநாகல் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட் டபோது சாரதி உயிரிழந்துள் ளார்.

கும்புக்வெவ பிரதேசத்தில் வசித்து வந்த தொரட்டியாவ பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றிய 38 வயதான பொலிஸ் கான்ஸ்டபிளே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

பஸ்ஸின் சாரதி கைது செய் யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# புதிதாக அமைக்கப்பட்ட 5 மைதானங்களை சம்பிரதாய நிகழ்வுகளின்றி திறக்க உத்தரவு

கொழும்பு, ஒக். 01

நான்கு பிரதேசங்களில் புதி தாக கட்டி முடிக்கப்பட்ட 05 விளையாட்டு நிலையங்களை சம்பிரதாயங்கள் இன்றி பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்குமாறு விளையாட்டுத் துறை அமைச்சர், பிரதமர் கலா நிதி ஹரிணி அமரசூரிய விளை யாட்டுப் பணிப்பாளர் நாயகத் துக்கு பணிப்புரை விடுத்துள் ளார்.

விளையாட்டுத்துறை அமைச் சின் அதிகாரிகளுடன் அண்மை யில் இடம்பெற்ற கலந்துரையா டலின் போதே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் மாத்த ளையில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை ஹொக்கி மைதானம், பிங்கிரிய வடமேற்கு விளை யாட்டு வளாக நீச்சல் குளம், ஓமந்தை வவுனியா மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள்ள பல்விளையாட்டு உள்ளக அரங் கம், ஓமந்தை வவுனியா மாவட் விளையாட்டு வளாக நீச்சல் தடாகம் ஆகியனவே இவ்வாறு திறக்கப்படவுள்ளன.

இதனை பொதுமக்கள் பார் வைக்கு திறந்து வைக்க பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# தேர்தலில் போட்டியிடும் கட்சி, சின்னம் மகிந்த, நாமலுடன் பேசி தீர்மானிப்போம்

## கூறுகிறார் ரோஹித்த அபேகுணவர்தன



கொழும்பு, ஒக். 01

பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் பேச் சில் ஈடுபடுவோம். பொதுத் தேர்தலில் போட்டியிடும், கட்சி மற்றும் சின்னம் தொடர்பில் அறிவிப்போம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்கவுக்கு மக்கள் வழங்கி யுள்ள ஆணையை மதிக்கிறோம். அரசாங்கத்தை நெருக்கடிக்குள் ளாக்கும் நோக்கம் எமக்கு கிடை யாது. ஏனெனில் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானால், மக்க ளும் நெருக்கடிக்குள்ளாகுவார் கள். ஆகவே மக்களுக்கு வழங் கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதியி டம் வலியுறுத்துகிறோம்.

தேர்தலில் வெற்றி மற்றும் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியில் இருப்பதொன்றும் எமக்கு புதி தல்ல, எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு பின் னர் எதிர்க்கட்சியாக செயற்படு வதற்கு தயாராகவுள்ளேன். களுத் துறை மாவட்ட மக்கள் என்னை தெரிவு செய்வார்கள் என்ற நம் பிக்கை உள்ளது-என்றார். (அ)

# இலங்கை மீனவர் படகொன்று சர்வதேச கடற்பரப்பில் விபத்து

கொழும்பு, ஒக். 01

இலங்கை மீனவர்கள் 05 பேருடன் கடலுக்கு மீன்பிடிக் கச் சென்ற படகொன்று சர்வ தேச கடற்பரப்பில் விபத்துக் குள்ளாகிருப்பதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த 05 இலங்கை மீனவர் களும் மிரிஸ்ஸ மீன்பிடித் துறை முகத்திலிருந்து "ரன்முத்து துவ 10" எனும் மீன்பிடிப் படகில் கடந்த 12 ஆம் திகதி மீன்பிடிக் கச் சென்றதாகவும் அந்த படகு கடந்த 26ஆம் திகதி விபத்துக் குள்ளானதானதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான படகு இப் போது இந்திய கடற்பரப்பில் மிதந்து கொண்டு இருப்பதாக படகின் உரிமையாளருக்கு மீன வர்கள் அறிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான படகில் இருக்கும் மீனவர்களுக்கு உதவு வதற்காக மற்றுமொரு படகை அனுப்பியுள்ளதாக படகின் உரி மையாளர் தெரிவித்துள்ளார். (அ)

# பொலிஸ் சூடு ஒருவர் காயம்!

கொழும்பு, ஒக். 01

பாணந்துறை, பள்ளியமுல்ல பகுதியில் பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பாணந்துறை வடக்கு பொலி ஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பொலிஸ் வீதித்தடையில் லொறி ஒன்றை நிறுத்துமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த உத்த ரவை மீறும் வகையில் லொறி முன்னால் சென்றதால் பொலி ஸார் லொறியை நோக்கி துப் பாக்கியால் சுட்டனர்.

லொறியில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர் தற்போது வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வருவ தாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த லொறி கால்நடை களை ஏற்றிச் சென்றதாக பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பட்டியலுக்கு உத்தரவாதம் இல்லை!

## சஜித் கடும் நிலைப்பாடு

கொழும்பு, ஒக். 01

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிடும் பங்காளிக் கட்சிகள், தேர்தலுக்கு முன்னரே கோரும் தேசியப்பட்டியல் ஒதுக்கீட்டுக்கு உத்தரவாதமளிக்காதிருக்க கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்திருக்கிறார் என அறியமுடிகின்றது.**

ஐக்கிய மக்கள் கூட்டணியில் தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இந்த கட்சிகள் கணிசமான வாக்குகளை பெற்றால் தேசியப் பட்டியல் ஆசனங்களை கோரும் என்பதுடன் அதற்கு முன்னரே அதற்கான உத்தரவாதத்தை கோரும் ஒப்பந்தங்களை கைச்சாத்திட கோரிக்கை விடுக்கும் என்பதால், தேர்தலுக்கு முன்னர் அவற்றுக்கான இணக்கப்பாடுகளை வெளியிடாதிருக்க சஜித் தீர்மானித்துள்ளதாக மேலும் தெரியவந்தது.

சஜித்தின் இந்த தீர்மானத்தால் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் தடுமாற்றமடைந்திருப்பதாக அறியமுடிகின்றது. இது தொடர்பில் சஜித்துடன் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுக்கவும் அக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, பொதுத் தேர்தலில் தோல்வியடையும் எவருக்கும் தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கக்கூடாதென சஜித் பிரேமதாஸவிடம் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது. (அ)

# நாசவேலை மூலம் அரசியல் அதிகாரத்தை பெறும் வேலைத்திட்டம் என்னிடம் இல்லை

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 01

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாசவேலை மூலம் அரசியல் அதிகாரத்தைப் பெறும் வேலைத்திட்டம் தன்னிடம் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு அனைத்து தரப்பிலிருந்தும் பல சவால்களை எதிர்கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாக பெரும்பான்மையான மக்கள் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர்.

தற்போதைய அரசியல் செயல்பாட்டில், ஐக்கிய மக்கள் சக்தியின் குறிக்கோள், நாட்டிற்காக வெற்றி பெறுவதும், நாட்டின் வெற்றிக்காக உழைப்பதும் ஆகும்.

பல பிரச்னைகளை எதிர்கொண்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்குவதில் தலைமைத்துவம் வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்திலும், தத்துவத்திலும் நாடு வெற்றி பெற வேண்டும்.

அரசனையும் மக்களையும் வெல்வது என்பது ஒருவரால் செய்ய முடியாத ஒன்று. அனைவரும் முனைப்புடன் பங்களிக்க வேண்டும்.

நாட்டின் சக்தி வாய்ந்த அரசியல் சக்தியான ஐக்கிய மக்கள் சக்தியை சீர்குலைத்து அல்லது பிரச்னைகளை உருவாக்கி அரசியல் வெற்றிகளைப் பெறுவதற்குப் பதிலாக, முற்போக்கான முறையில் செயற்பட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமான தீர்வுகளை வழங்குவேன்.

நாட்டின் பிரச்னைகள் மற்றும் சவால்களுக்கு நாம் எப்பொழுதும் வலுவாக பங்களிக்க வேண்டும். அதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் வேலைத்திட்டமாகும்-என்றார். (அ)

# இளம் வேட்பாளர்களுக்கு இம்முறை அதிக வாய்ப்பு!

## தேர்தல் குறித்து நாமல் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 01

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின் போது இளம் வேட்பாளர்களுக்கும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கும் அதிக வாய்ப்புகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, 50 வயதிற்குட்பட்டவர்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை பொதுஜன பெரமுனவில் வெற்றிடமாகவுள்ள மாவட்ட மற்றும் தேர்தல் அமைப்பாளர் பதவிகள் விரைவில் நிரப்பப்படும் என்றும், இளம் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும் என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ)

# பல அரச நிறுவனங்கள் கலைக்கப்பட வாய்ப்பு

கொழும்பு, ஒக். 01

இலங்கை திரிபோஷ நிறுவனம் உட்பட பல அரச நிறுவனங்களை கலைப்பது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சு தொடர்பான நோக்கங்களுக்கு அமைய, விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கை திரிபோஷ நிறுவனம், இலங்கை பத்திரிகை பயிற்சி நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு தேசிய அறக்கட்டளை நிதியம் மற்றும் திறைசேரி செயலாளருக்கு சொந்தமான நிறுவனங்கள், குறைவான செயல்திறன் கொண்ட நிறுவனங்கள் அல்லது பயன்படுத்தப்படாத சொத்துகள் சட்டத்தின் மறுமலர்ச்சி (அகற்றுதல்) சட்டத்தின் கீழ் கலைக்கப்பட உள்ளன.

கலைக்கப்படவுள்ள அல்லது ஏனைய நிறுவனங்களுடன் இணைக்கப்படவுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு தூதரகங்களில் பல அரசியல் நியமனங்கள்!

கொழும்பு, ஒக். 01

இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் அல்லாத அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் அரசியல்வாதிகளின் உறவினர்கள் பலர் வெளிநாட்டு தூதரகங்களில் பல்வேறு பதவி நிலைகளில் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் அமெரிக்காவின் வொஷிங்டனில் இலங்கைத் தூதுவராக முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க செயற்படுவதோடு தூதரகத்தின் மூன்றாவது அதிகாரி தாரக திஸாநாயக்க ஆவார்.

தாரக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவின் மகனாவார். அங்கு எழுத்தாளராக கடமையாற்றுபவர் முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தின் மகள் இந்திவரி குலரத்ன.

இதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட தூதரகத்தில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவின் மகன் விபுல கடமையாற்றியுள்ளார்.

அதே தூதரகத்தின் ஊடக அதிகாரி அசோக ஜயதுங்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செய்தி தொடர்பாளராக கடமையாற்றியவர்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் கொன்சியூலர் ஜெனரலாக கடமையாற்றுபவர் டாக்டர் லலித் சந்திரதாஸ.

இவர் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் மைத்துனர் ஆவார்.

அவுஸ்திரேலியாவின் கான்பராவின் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வர ஜனாதிபதி அலுவலகத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

அந்த அலுவலகத்தில் மூன்றாவது அதிகாரியாகப் பணிபுரிபவர் டி.சி.பெர்னாண்டோபுள்ளே. முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மனைவியாவார். மெல்பேர்ன் கொன்சியூலர் ஜெனரல் சந்தித் சமரசிங்க. இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

ஜப்பான் ரோக்கியோவில் இலங்கை தூதுவர் ரொட்னி பெரேரா. இவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான ரொனால்ட் பெரேராவின் சகோதரர் ஆவார். 2006ஆம் ஆண்டு முதல் இதே அலுவலகத்தில் எழுத்தாளராக கடமையாற்றி வரும் இந்து குணரத்ன, முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் உறவுக்கார மகளாவார்.

இங்கிலாந்து தூதுவர் ரோஹித போகல்லாகம முன்னாள் அரசியல்வாதி ஆவார். இங்கு மூன்றாவது அதிகாரியான சேனிய புஞ்சி நிலமே முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயின் மகன்.

இதற்கு முன்னர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவின் மகன் கசுந்த சில்வா மூன்றாவது அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவின் மகனான சஹஸ்ர பண்டார, பாரிஸில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் மூன்றாவது அதிகாரியாவார்.

அதற்கு முன்னர் அந்த பதவியில் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் இளைய சகோதரரான அமில திஸாநாயக்க பணியாற்றியிருந்தார்.

அத்தோடு சீஷெல்ஸ் விக்டோரியாவின் தூதுவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஸ்ரீமால் விக்கிரமசிங்க ஆவார். இவர் ஷிரந்தி ராஜபக்ஷவின் சகோதரர் ஆவார். பலஸ்தீனத்தில் இலங்கைக்கான பிரதிநிதியாக முன்னாள் பிரதி அமைச்சர் நாவலகே பேர்னாட் குரே பதவி வகிக்கிறார்.

மேற்குறிப்பிட்ட இந்த பட்டியலிலுள்ள நபர்கள் அல்லாத இன்னும் பலர் இவ்வாறு வெளிநாட்டு தூதரகங்களில் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிகின்றமை அண்மையில் வெளிவந்துள்ளன. (அ)

# சுதந்திர கட்சி- பொதுஜன பெரமுன: இடதுசாரி கூட்டணி அமைக்க பேச்சு?

கொழும்பு, ஒக். 01

இடதுசாரி கூட்டணி ஒன்றை கட்டியெழுப்புவது தொடர்பில் சில எதிர்க்கட்சிகள் கலந்துரையாடி வருகின்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து நீங்கி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய குழுவினர் இந்த கலந்துரையாடலில் முதன்மை வகித்துள்ளனர்.


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க, நிமல் லான்சா, அனுர பிரியதர்ஷன யாப்பா, எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்த கலந்துரையாடலில் கலந்துக் கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.


எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பரந்த கூட்டணியொன்றின் கீழ் போட்டியிடுவது அவர்களின் நோக்கமாக காணப்படுகின்றது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைவது தொடர்பில் இங்கு ஒரு தரப்பினர் யோசனை முன்வைத்துள்ள நிலையில் அதில் கலந்து கொண்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்தக் கூட்டணியுடன் இணைவதை விட சக்திவாய்ந்த இடதுசாரி கூட்டணி ஒன்றை உருவாக்கி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதே அவசியம் என இதன்போது பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தோண்டிய ஐவர் சிக்கினர் தடுப்பு காவலில் வைத்து விசாரணை





கல்முனை, ஒக். 01

**வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான ஐந்து சந்தேக நபர்களையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் நதீர் உத்தரவிட்டுள்ளார்.**

அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதி பகுதியில் வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டிலேயே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

சிலர் வீடொன்றில் புதையல் தோண்டுவதாக பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்களை கைது செய்தனர்.

அத்துடன் கைதான ஐந்து சந்தேக நபர்களையும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது சந்தேக நபர்களை நேற்றுத் திங்கட்கிழமை வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

குறித்த சம்பவத்தில் பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் வசிக்கும் நபர் உட்பட அவரது நண்பர்கள் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் 28 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் நால்வர் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பூஜை பொருட்கள், மண்வெட்டி, அலவாங்கு உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பெரியநிலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அம்பாறையில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

## வேளாண்மை செய்கைக்கான உழவு வேலைகள் ஆரம்பம்

கல்முனை, ஒக். 01

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கான உழும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் குளிரான நிலைமையும், காலநிலை மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது.

சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று விவசாய விஸ்தரிப்பு நிலையங்கள் மழை பெய்ய ஆரம்பித்ததும் பெரும்போக விதைப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறு விவசாயிகளை கேட்டிருந்தன.

ஒவ்வொரு போகத்தின் போதும் உர மானியமாக ஹெக்டேயருக்கு 15,000 ரூபாய் வழங்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பணிப்புரைக்கமைய பெரும்போகத்திலிருந்து ஹெக்டேயருக்கு 25,000 ரூபாய் வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்திருப்பது விவசாயிகளுக்கு மேலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)



# மஹ்மூத் மகளிர் கல்லூரி சாதனை

கல்முனை, ஒக். 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) வரலாற்றில் முதல் தடவையாக 26 மாணவிகள் அனைத்து பாடங்களிலும் அதாவது 9 ஏ சித்திகளை பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது. இதேவேளை, 33 மாணவிகள் 8 ஏ பியும் 7 மாணவிகள் 8 ஏ சியும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். (எ)



# லீடர் அஷ்ரப் வித்தியாலயம் மாகாண மட்டத்துக்கு தெரிவு

சாய்ந்தமருது, ஒக். 01

சிறுவர் விளையாட்டுப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலயம் வலய மட்டத்தில் இரண்டு முதலாமிடங்களைப் பெற்று கிழக்கு மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான போட்டிகளில் இந்தப் பாடசாலையின் தரம் 3, தரம் 4, தரம் 5ஐ சேர்ந்த ஆண், பெண் 6 அணிகள் கலந்து கொண்டன. அதில் 2 அணிகள் முதலாமிடத்தையும், 4 அணிகள் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்த மாணவர்களை இப்போட்டிகளுக்காக பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம். எப். எம். றிபாஸ் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என். எம். ஏ. ஆபாக் மற்றும் மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியை றிபானா ஆகியோர்களுக்கும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பாடசாலை அதிபர் எம். ஐ. சம்சுதீன் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (எ)

# ஆரையம்பதி மருத்துவமனையில் தலசீமியா சிகிச்சை மையம் திறப்பு

ஆரையம்பதி, ஒக். 01

தலசீமியா நோய்க்கான சிகிச்சையை கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்கும் முதன்மை நடவடிக்கையாக பிராந்திய தலசீமியா மையம் ஆரையம்பதி பிரதேச மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில், நோயாளர்களை அடையாளம் காணல், நோயாளர்களுக்கான இரத்தமாற்று சிகிச்சை, நோய்த் தடுப்பு ஆலோசனைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் உட்பட்ட பல்வேறு வகையான நோய்த் தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான விசேட ஒருங்கிணைப்பின் தேவை கருதி அமைக்கப்பட்ட இந்த நிலையத்துக்கான நிதிப்பங்களிப்பை அயர்லாந்தைச் சேர்ந்த சோனியா லிஞ்ச் எனும் குழந்தையின் நினைவாக, பெற்றோர்கள் நண்பர்கள் மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினர் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

ஆரையம்பதி பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி எஸ். குணராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிலையத் திறப்பு விழாவில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர். முரளீஸ்வரன், மட்டக்களப்பு போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் பீ. மைதிலி உட்பட போதனா மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிராந்திய மருத்துவ அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வை தொற்றா நோய் பொறுப்பு மருத்துவ அதிகாரி இ. உதயகுமார் ஒருங்கிணைத்து நடத்தியிருந்தார்.

தலசீமியா, ஒரு நபருக்கு அவரது பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் மரபணு நோயாகும். ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தி குருதிச்சோகையை உண்டாக்குதலே இந்த நோய்க் குறியாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு கண்டறியப்பட்ட இந்த நோயானது, நாடளாவிய ரீதியில் 2000 இற்கும் அதிகமான குழந்தைகளை பாதித்துள்ளதாகவும் கண்டறிப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான்மீது இஸ்ரேல் தாக்குதல் 87 குழந்தைகள் உட்பட 1,030 பேர் பலி



பெய்ரூட், ஒக். 01


**லெபனான் மீது ஒரு வாரமாக இஸ்ரேல் நடத்திவரும் கொடூரத் தாக்குதலில் 87 குழந்தைகள், 156 பெண்கள் உட்பட 1030 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, லெபனானின் பெய்ரூட் நகரின் மத்திய பகுதியில் இஸ்ரேல் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடத்திய வான் வழித் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடையும் சூழலில் ஒரே வாரத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா உட்பட 7 முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த ஓராண்டாகவே இஸ்ரேல் - லெபனான் இடையே மோதல் நிலவி வந்தாலும், கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தீவிரத் தாக்குதல் நடந்து வருகிறது. அதிலும் முதன்முறையாக நேற்றுத் திங்கட்கிழமை காலை பெய்ரூட் நகரின் மத்திய பகுதியான கோலாவில் குடியிருப்புகள் நிரம்பிய இடத்தில் இஸ்ரெல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் நால்வர் பலியாகினர். இவர்களில் மூன்று பேர் பலஸ்தீன விடுதலை முன்னணி என்ற அமைப்பின் முக்கிய தலைவர்கள் என அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது.

ஈரான், சிரியாவின் ஆதரவுடன் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா, லெபனானின் இரகசிய இடங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். ஈரானின் மூத்த தலைவர்கள், ஹிஸ்புல்லாவின் மூத்த தலைவர்களுக்கு மட்டுமே அவரின் இருப்பிடம் தெரியும். இந்த நிலையில் அவர் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டது உறுதியானது. முன்னதாக ஹிஸ்புல்லா ட்ரோன் பிரிவுத் தலைவர் உள்ளிட்ட பலரும் கொல்லப்பட்டனர்.

நஸ்ரல்லா கொல்லப்பட்டதைக் கண்டித்து பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தை நோக்கி முன்னேறிய போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி போராட்டத்தைக் கலைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. (எ)



# வெள்ளம், நிலச்சரிவால் நேபாளத்தில் 151 பேர் பலி

காத்மண்டு, ஒக். 01

நேபாளத்தில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 151 பேர் பலியாகினர்.

நேபாளத்தில் வரலாறு காணாத வகையில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு இடங்களில் பெரு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 151 பேர் வரை பலியாகினர். 56 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு, 3 நாட்கள் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து கிழக்கு மற்றும் மத்திய நேபாளத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் காத்மண்டு பள்ளத்தாக்கு பகுதியில் 37 பேர் வரை பலியாகினர்.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றால் நேபாளத்தில் 300இற்கும் மேற்பட்ட வீடுகள், 16 பாலங்கள் சேதமடைந்தன. (எ)

# நஸ்ரல்லா உயிரிழப்புக்கு பழிவாங்க ஈரான் திட்டம்

## அமெ. இராணுவ தளங்கள் மீது தாக்குதல்

தெஹ்ரான், ஒக். 01

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் உயிரிழப்புக்காக இஸ்ரேலை பழிவாங்க ஈரான் திட்டமிட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக சிரியாவில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இஸ்ரேல் விமானப் படை தாக்குதலில் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தமை மத்திய கிழக்கில் பதற்றமான சூழலை உருவாக்கியுள்ளது. இஸ்ரேல் இராணுவம் சில நாட்களுக்கு முன்பு சிரியாவில் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஈரான் இராணுவத்தின் சிரேஷ்ட தளபதி அப்பாஸ் உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு இஸ்ரேலை பழிவாங்குவோம் என்று ஈரான் அரசு பகிரங்கமாக அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில் ஈரான் பாராளுமன்றத்தின் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. மூடிய அரங்கில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. (எ)

# ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லாவை காட்டிக் கொடுத்த ஈரான் உளவாளி

பெய்ரூட், ஒக். 01

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் பதுங்குமிடத்தை ஈரானை சேர்ந்த உளவாளி காட்டிக் கொடுத்துள்ளார்.

"பெய்ரூட்டில் உள்ள சுரங்க அலுவலகத்தில் நஸ்ரல்லா தங்கியிருக்கிறார். அடுத்த சில நாட்களில்அவர் வேறு இடத்துக்கு மாறிவிடுவார்"என்று ஈரானில் உள்ள மொசாட் உளவாளி இஸ்ரேல் இராணுவத்துக்கு உறுதியான தகவல் வழங்கியுள்ளார். அமெரிக்காவில் முகாமிட்டிருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. ஹசன் நஸ்ரல்லா மீது உடனடியாக தாக்குதல் நடத்த நெதன்யாகு உத்தரவிட்டார். அடுத்த சில நிமிடங்களில் இஸ்ரேல் விமானப் படையின் போர் விமானங்கள் பெய்ரூட் நோக்கி சீறிப் பாய்ந்தன. அமெரிக்க தயாரிப்பான ஜி. பி. யு. - 31 ஜே. டி. ஏ. எம். ரக குண்டுகள், இஸ்ரேல் தயாரிப்பான ஸ்பைஸ் - 200 ரக குண்டுகள் ஹிஸ்புல்லா தலைமை அலுவலகத்தின் மீது அடுத்தடுத்து வீசப்பட்டன.

மொத்தம் 80 குண்டுகள் ஹிஸ்புல்லாவின் சுரங்க அலுவலகத்தை துளைத்து வெடித்து சிதறின. ஒவ்வொரு குண்டும் தலா ஒரு தொன் எடை கொண்டதாகும். இந்தத் தாக்குதலில் சுரங்க அலுவலகம் மண்ணோடு, மண்ணானது. 65 அடி ஆழத்துக்கு மிகப் பெரிய பள்ளம் உருவானது. ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ருல்லா உட்பட ஏராளமானோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (எ)

சுனிதா, வில்மோரை மீட்கும்

# ஸ்பேஸ் எக்ஸ் ட்ராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி மையத்தில்

வாஷிங்டன், ஒக். 01

சுனிதா வில்லியம்ஸ், வில்மோரை மீட்கும் ஸ்பேஸ் எக்ஸ் ட்ராகன் விண்கலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடைந்தது.

கடந்த ஜூன் 5ஆம் திகதி சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் என இருவரும் போயிங் நிறுவனத்தின் ஸ்ரார்லைனர் விண்கலனில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்துக்குப் புறப்பட்டனர். அவர்கள் அடுத்த நாளான ஜூன் 6ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்தனர். அப்போது, முதல் அவர்கள் இருவரும் அங்கேயே உள்ளனர். அவர்கள் பயணித்த ஸ்ரார்லைனர் விண்கலனில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு இதற்கு காரணமாக அமைந்தது.

விண்வெளி மையத்தில் சுமார் 100 நாட்களுக்கும் மேலாக வுள்ள அவர்களை பூமிக்கு அழைத்துவர நாசா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில், அவர்களை பூமிக்கு அழைத்து வரும் பொறுப்பை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் வசம் நாசா ஒப்படைத்தது.

இந்த நிலையில், சுனிதா வில்லியம்ஸ், வில்மோரை மீட்கும் முனைப்பில் ஸ்பேஸ் எக்ஸ் ட்ராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி மையத்தை ஞாயிற்றுக்கிழமை மாலை அடைந்தது. (எ)

# துப்பாக்கி சூட்டில் 17 பேர் உயிரிழப்பு

கேப் டவுண், ஒக். 01

தென்னாபிரிக்காவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் கிழக்கு கேப் மாகாணம் லுசிகி நகரில் இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றது. இதில் 12 பெண்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.

குடும்ப நிகழ்ச்சியின்போது இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# ஹிஸ்புல்லா தளபதி நபில் கவுக் பலி!

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

பெய்ரூட், ஒக். 01

லெபனானில் இஸ்ரேல் நடத்திவரும் தொடர் வான்வழித் தாக்குதலில், ஹிஸ்புல்லாக்களின் மற்றொரு உயர்மட்ட தளபதியான நபில் கவுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு படை அதன் எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டிருக்கும் பதிவில், "ஹிஸ்புல்லாக்களின் பாதுகாப்புப் பிரிவின் தளபதியும், நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான நபில் கௌவுக் கொல்லப்பட்டார். ஹிஸ்புல்லாக்களின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த கவுக், இஸ்ரேல் அரசு மற்றும் மக்களுக்கு எதிரான தீவிரவாதத் தாக்குதலில் நேரடியாக ஈடுபட்டார். கடந்த 1980இல் அவர் ஹிஸ்புல்லாவில் இணைந்தார். அவரது துறையில் நிபுணத்துவம் வாய்ந்த முக்கிய நபராகக் கருதப்பட்டார்.

ஹிஸ்புல்லா அமைப்புடன் தொடர்புடைய அனைத்து தளபதிகளையும் இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழிக்கும். இஸ்ரேல் அரசு மற்றும் மக்களை அச்சுறுத்தும் அனைவருக்கும் எதிராக எமது பாதுகாப்பு படை செயல்படும்" என்று தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஹிஸ்புல்லாக்கள் இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.

இதனிடையே இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லாக்களின் தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லாவின் உடல் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக மாற்றும் கல்வி முறை வேண்டும்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 01

**கல்வித்துறை அரசியலாகிவிட்டது. தற்போது சமூகத்தில் கல்வியின் மீது நம்பிக்கை இல்லை. கல்வியின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானது. இலங்கையை உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக மாற்றும் கல்வி முறையை தயார் செய்ய வேண்டும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**



நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு விரைவான தீர்வுகளைத் தேடும் அதே வேளை சிறந்த கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த விரும்புகிறோம். இது ஒரு கூட்டுப் பயணம். ஒரு கட்சியோ, ஒரு அரசாங்கமோ மாத்திரம் அதை செய்ய முடியாது. அதற்கு மக்களின் ஆதரவை எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐந்து வருடங்களின் பின்னர் நாடளாவிய ரீதியில் உள்ள 396 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் பங்குபற்றிய விசேட செயலமர்வொன்று கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் பாடசாலை நிதி முகாமைத்துவம் தேசிய பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகள் தேசிய பாடசாலைகள் மேற்பார்வையின்போது இனங் காணப்பட்ட பொதுவான விடயங்கள் உட்பட தேசிய பாடசாலை கிளைகளினால் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

மறுமலர்ச்சி யுகம் - வளமான நாடு நம் அனைவருக்கும் அழகான வாழ்க்கை என்ற இந்த தொலைநோக்கை யதார்த்தமாக்குவதற்கு கல்வியின் முக்கியத்துவத்தை இங்குள்ள அதிபர்கள் நன்கு அறிவார்கள். அரசாங்கம் என்ற வகையில் கல்விக்கான அனைத்து ஒத்துழைப்பையும் வழிகாட்டுதலையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

கல்வி என்பதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது அறிவை மட்டும் வழங்குவதன்று. அதையும் தாண்டிய ஒரு விரிந்த தொலைநோக்கு கல்வியில் உள்ளது. தொழிலுக்காக மட்டுமின்றி இந்த நாட்டைப் பொறுப்பேற்கக்கூடிய, இந்த நாட்டை மாற்றக்கூடிய, இந்த நாட்டை வழி நடத்தக்கூடிய நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் எமது கல்விக் கொள்கையைத் தயாரித்துள்ளோம்.

ஒரு வளமான நாடு என்பதன் மூலம் எமது அரசாங்கம் நாடு வது பொருளாதார அடிப்படையில் மட்டும் வளமான நாடாக இருப்பதையல்ல. கலாசாரம், ஒழுக்கப் பெறுமானங்கள் மற்றும் மனப்பாங்குகளுடன் அனைத்து அம்சங்களிலும் நாம் வளம் பெற வேண்டும் என்பதாகும்.

இத்தகைய சமூகத்தில் நாம் அனைவரும் அழகான வாழ்க்கையை வாழ முடியும். நாம் மறுமலர்ச்சி யுகம் என்று கூறுவது, இந்த நாட்டுக்கு ஒரு புதிய ஆரம்பம் தேவை என்பதையே ஆகும்.

ஐக்கியம், நல்லிணக்கம் மற்றும் நவீன உலகில் பெருமையுடன் முன்னோக்கிச் செல்லக்கூடிய பிரஜைகளை நாம் உருவாக்க வேண்டும். நாம் முன்மொழிந்துள்ள கல்விக் கொள்கை இந்த அபிலாஷைகளை அடைவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

தற்போது சமூகத்தில் கல்வியின் மீது நம்பிக்கை இல்லை. கல்வியின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானது. விரக்தியான நிலையே காணப்படுகிறது.

தற்போதுள்ள கல்வி முறையில் பிள்ளைகள் பெற்றோர்கள் மற்றும் சமூகம் திருப்தி அடைகின்றனரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

திட்டமிட்டபடி பரீட்சையை நடத்த முடியுமா? பரீட்சை பெறுபேறுகள் பற்றி நீங்கள் நம்பிக்கையோடு இருக்க முடியுமா? கல்வித்துறையில் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் குறித்து நீங்கள் நம்பிக்கையுடன் இருக்க முடியுமா? பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும் முறையில் சமுதாயம் நம்பிக்கை வைக்க முடியுமா? நம்பிக்கையை இழக்கும் வகையில் இந்த செயல்முறை மற்றும் முறைமை பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியலாகிவிட்டது.

இங்கு இந்த கல்வி முறைமையில் பணியாற்றும் உங்களிடம் தவறில்லை. காலாகாலமாக கல்வியில் கவனம் செலுத்தாமை கல்வியின் முக்கியத்துவம் ஒரு நாட்டின் வளர்ச்சியில் கல்வியே அடிப்படைப் பங்காற்ற வேண்டும் என்ற பொறுப்பில் இருந்து படிப்படியாக அரசு விலகியதால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கல்வி அரசியல்மயமாகியுள்ள காரணத்தினால் இத்துறையில் உள்ள அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். உங்கள் தொழில் முறை கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில் கல்வி முறையை கட்டியெழுப்ப நாம் விரும்புகிறோம். உங்களது பொறுப்பை சுதந்திரமாக நிறைவேற்றத் தேவையான சூழலை உருவாக்குவதே எங்கள் நோக்கம்-என்றார். (அ)


# தெஹிவளை மிருகக்காட்சிசாலை இலவசமாக பார்வையிட ஏற்பாடு

கொழும்பு, ஒக். 01

ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர் தினமான இன்று 12 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் இலவசமாக தெஹிவளை மிருகக்காட்சிசாலையை பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை வளாகத்தில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சவூதியில் இறந்த மனைவியின் உடலை மீட்டுத் தருமாறு கணவன் கோரிக்கை!



வவுனியா, ஒக். 01

வவுனியா ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் சவூதி நாட்டில் உயிரிழந்துள்ள நிலையில் அவரது உடலை மீட்டுத்தருமாறு கணவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது மனைவி கடந்த இரு வருடங்களுக்கு முன்பாக வேலை விசாவில் சவூதி அரேபியாவுக்கு சென்றார். அனுராதபுரம் பகுதியில் உள்ள முகவர் ஒருவரின் ஊடாகவே அவர் பயணம் செய்துள்ளார்.

பயணம் செய்த நாளில் இருந்து இதுவரை காலமும் சாதாரண தொலைபேசியில் தான் எம்மோடு கதைத்து வந்தார். அவரது முகத்தைக்கூட நாம் பார்க்கவில்லை. கடந்த சில நாட்களாக தனக்கு அங்கு சித்திரவதை இடம்பெறுவதாகவும் தன்னை உடனடியாக நாட்டுக்கு திருப்பி எடுக்குமாறும் கூறினார். இது தொடர்பாக பல தடவை அவரை அனுப்பிய முகவரிடம் கூறியும் உரிய பதிலை அவர் தரவில்லை. இந்நிலையில் எனது மனைவி சில நாட்களாக என்னுடன் தொடர்பை ஏற்படுத் ணதவில்லை.

நாம் முகவரை அணுகிய போது அவர் சுகவீனமடைந்து இருப்பதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். அவர் இறந்து 15 நாட்களின் பின்னரே எமக்கு தகவல் வழங்கப்பட்டது.

தற்போது மரணமடைந்து 40 நாட்கள் கடக்கின்ற நிலையில் எனது மனைவியின் உடலைக் கொண்டு வருவதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே அவரது சடலத்தை யாவது விரைவாக பெற்றுத்தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (அ-10)

# இந்திய சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஒக். 01

நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப்பயணிகளில் 21.6 சத வீதமானோர் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளதாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம் மாதம் கடந்த 25 ஆம் திகதிவரையில் 99 ஆயிரத்து 955 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என வும், அவர்களில் 21 ஆயிரத்து 607 பேர் இந்தியாவிலிருந்தும், பிரித்தானியாவில் இருந்து 7 ஆயிரத்து 496 பேரும், ஜேர்மனியில் இருந்து 6 ஆயிரத்து 651 பேரும், சீனாவில் இருந்து 6 ஆயிரத்து 640 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 14 இலட்சத்து 62 ஆயிரத்து 623 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

# யாழ்ப்பாண கோட்டை பகுதியில் பிளாஸ்ரிக் பொருட்கள் அகற்றல்!

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ்ப்பாண கோட்டை நகர்ப் பகுதி மற்றும் பண்ணைப் பகுதியில் பிளாஸ்ரிக் பொருட்களை அகற்றும் நடவடிக்கை நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிளீன் அப் சிறீலங்கா எனும் தொனிப்பொருளில் நகரை சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் றோட்டறி கழகத்தின் கீழ் இயங்கும் யாழ் பெனின்சுலா றோட்டறக்ட் கழகம், நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகம், சுழிபுரம் றோட்டறக்ட் கழகம் ஆகிய கழகங்கள் இணைந்து சுத்தப்படுத்தல் நடவடிக்கையை முன்னெடுத்தன.

இதன்போது கோட்டை பகுதியிலுள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் அகற்றப்பட்டதுடன் பண்ணை கடற்கரையோரத்தில் காணப்பட்ட ஏராளமான பிளாஸ்டிக் பொருட்கள் இதன் போது அப்புறப்படுத்தப்பட்டன.

அப்புறப்படுத்தப்பட்ட கழிவுகள் யாழ் மாநகர சபை கழிவு கற்றல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டன. கழிவகற்றல் செயற்பாட்டில் கழக ஒருங்கிணைப்பாளர்கள், றோட்டறக்ட் கழகங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் பெண் கைது!

கொழும்பு, ஒக். 01

சுமார் 55 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களை சட்டவிரோதமாகக் கொண்டுவந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

ஜா-எல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் பயணப் பையில் மறைத்து, கொண்டுவரப்பட்ட 36,800 சிகரெட்டுக்களை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்குதான்...

குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் பொதுச்சபையின் திருகோணமலை தீர்மானம், சங்குச் சின்னத்தைப் பெற்றுக்கொள்ள தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எடுத்த ஏகமனதான முடிவை மாற்றியமைக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

செப்ரெம்பர் 26ஆம் திகதி, தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு எடுத்த ஏகமனதான தீர்மானத்திற்கமைய, குத்துவிளக்குச் சின்னத்திற்குப் பதிலாக, சங்கு சின்னத்தை மாற்றியமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியே வெளியேறியதாகவும், தாம் அதிலிருந்து வெளியேறும் முடிவை எடுக்கவில்லை என்றும், ஆகவே அவர்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு திரும்பி வரவேண்டும் என்றும் கருணாகரம் சுட்டிக்காட்டினார். (அ)

## கைக்குண்டு...

பெற்றோல் குண்டுகள், 2 இரும்பு குழாய்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான இருவரும் அண்மையில், நெல்லியடியில் வர்த்தக நிலையம் ஒன்று எரிக்கப்பட்ட சம்பவம் உட்பட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரும் சட்டநடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வடக்கில்...

பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 260 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றி அனைவரும் சித்தியடைந்து உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கீரிமலை...

மந்திகை - நெல்லியடி ஊடாக கொழும்புக்கு பயணமாகும்.

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையால் நடத்தப்படும் இந்தப் பேருந்து சேவை 2020ஆம் ஆண்டு கொரோனா மற்றும் ஆளணிப் பற்றாக்குறையால் நிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிவில்...

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. கூட்டத்தின் முதல் நாளிலேயே இலங்கை தொடர்பில் விவாதம் நடைபெற்றது. இந்த நிலையில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை காலநீடிப்பு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதேநேரம், அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் புதிதாக நாட்டை பொறுப்பேற்றுள்ள நிலையில் 51/1 தீர்மான வரைவில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி வரைவு அரசாங்கத்துக்கு அனுப்பப்படும். அரசாங்கத்தின் முடிவையடுத்து வாக்கெடுப்பை நடத்துவதா அல்லது இல்லையா என்பது தீர்மானமாகும்.

இலங்கை தொடர்பான பிரேரணையை அரசாங்கம் ஏற்கமறுக்கும் சாத்தியமே அதிகம் என்பதால் வாக்கெடுப்பு நடத்தப்படவே அதிக வாய்ப்புள்ளது. இதனால், உறுப்பு நாடுகளின் ஆதரவைக் கோரி பேச்சுகளை முன்னெடுக்க சிவில் சமூக அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் ஜெனிவா பயணமாகவுள்ளனர். (ஐ)

## ஐ.எம்.எவ்...

குறித்து மீள் பரிசீலனை செய்தல் அல்லது மாற்றங்களை செய்வது தொடர்பில் பல்வேறு பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

இதேநேரம், அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துடன் தமது உறவை வலுப்படுத்த விரும்புவதாக சர்வதேச நாணய நிதியம் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையிலேயே நாளை புதன்கிழமை நாட்டுக்கு வருகை தரவிருக்கும் சர்வதேச நாணய நிதிய குழுவினர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுப்பர். அத்துடன், மூன்றாம் கட்ட மீளாய்வுப் பணிகளிலும் ஈடுபடுவர் என்று தெரிய வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்மக்கள்...

வேட்பாளராக களமிறக்கவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில்,

தமிழ் மக்கள் கூட்டணி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடனோ அல்லது இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடனோ இணைந்து போட்டியிடுவதில்லை. தனித்து கட்சியின் மான் சின்னத்தில் மட்டுமே போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கட்சித் தலைவரான க. வி. விக்னேஸ்வரன் தேர்தலில் போட்டியிடாததால், முதன்மை வேட்பாளராக க. அருந்தவபாலனை நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் அவருடன் பேசி இணக்கம் காணவும் முடிவு எட்டப்பட்டது.

மேலும், கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாது போகும் வாய்ப்புள்ளது. எனவே, கிழக்கில் மட்டும் கூட்டணியாக அல்லது வேறு கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பிலும் பேசப்பட்டது. (ஐ)

## ராஜபக்ஷர்கள்...

மக்களுக்கு தெரிவித்து வந்தனர்.

ஆனால் கடந்த காலங்களில் ஊடக சந்திப்புக்கள் நடத்தி நாடகமாடியோர் மீண்டும் அதே பணியினை செய்கின்றனர். நாம் கூறுவது என்னவென்றால், அரச தலைமையும் கிடைத்து, அமைச்சரவையும் நியமிக்கப்பட்டு அனைத்து வகையான அதிகாரங்களும் கிடைத்தும் மீண்டும் ஊடக நாடகத்தினையே நடத்துகின்றனர்.

ஏதும் ஒரு இடத்தில் திருட்டு இடம் பெற்றிருந்தால், ஊடக நாடகங்களை முன்னெடுக்காது, தயவு செய்து குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடு செய்து பொலிஸ் விசாரணைகளை நடத்தி அவர்களை கைது செய்து சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம்.

ராஜபக்ஷர்கள் திருடர்கள் என கடந்த காலங்களில் கூறியிருந்தீர்கள். 18 பில்லியன் டொலர்களை உகண்டாவுக்கு விமானம் மூலம் கொண்டு சென்றதாக தெரிவித்தீர்கள்.

உடனடியாக இது குறித்து சாட்சிகளை தேடி உடனடியாக விசாரணை குழுவொன்றினை நிறுவி இவற்றை கண்டுபிடியுங்கள். ஏனெனில், இந்தப் பணத்தினை வெளிநாட்டுக்கு அனுப்பியதாக நீங்கள் தான் கூறியிருந்தீர்கள். இதனை கண்டுபிடிக்காது விட்டால் இதன் பின்னால் மக்கள் விடுதலை முன்னணிதான் இருக்கும் என மக்கள் நினைப்பார்கள் - என்றார். (அ)

# எரிபொருட்களின் விலை குறைந்தது

கொழும்பு, ஒக். 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன.

இதன்படி, 92 ஒக்ரேன் ரக பெற்றோல் 21 ரூபாயால் குறைவடைந்து லீற்றரின் விலை 311 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ டீசல் 24 ரூபாய் குறைவடைந்தது. இதன்படி ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 283 ரூபாயாகும். சுப்பர் டீசல் லீற்றருக்கு 33 ரூபாய் குறைவடைந்து 319 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 19 ரூபாய் குறைக்கப்பட்டு 183 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

95 ஒக்ரைன் பெற்றோலின் விலை மாற்றமின்றி அதே விலையில் தொடர்கிறது.

இதேநேரம், இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் விலைக்கு அமைய லங்கா ஐ. ஓ. சி. நிறுவனமும் எரிபொருள் விலைகளை குறைத்துள்ளது. (ஐ)

## கட்சியின்...

வேட்பாளர் நியமனம் வழங்குவதே சரியானது - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மன்னாரில் ஊடகங்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கட்சியின் முடிவுகளுக்கு எதிராக செயல்பட்டவர்கள் கடந்த காலங்களில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். ஆகக்குறைந்தது அவர்களுக்கு வேட்பாளர் நியமனம் என்றுமே கொடுக்கப்படவில்லை. கட்சி இதுவரை இயங்கியது போன்று இயங்குவதாக இருந்தால் அப்படியானவர்களுக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படமாட்டாது என்பதே எனது எதிர்பார்ப்பு.

கட்சியின் முடிவுக்கு மாறாக வேறு நபர்களுக்கு பிரசாரம் செய்தோரிடம் விளக்கம் கோரியிருக்கிறோம். அப்படியானோருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படுமா என்று நான் தனியாகக் கூற முடியாது. நியமனக் குழுவின் முடிவே இறுதியானது.

ஒரு கட்சி கட்சியாக இருக்க வேண்டுமெனில், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படக் கூடாது. ஏற்கனவே, பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் தொடர்ந்து இருப்பதில் தவறில்லை. அவர்கள் கட்சி ஒழுக்கநெறிகளுக்கு ஏற்ப நடந்து கொண்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு வேட்பாளர் நியமனம் கொடுப்பது சரியானது.

வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அவர்கள் வராவிட்டால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகிய நாங்கள் தனித்து போட்டியிடுவோம்.

நியமன பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிதுகாலமே இருப்பதால் அவர்களும் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்தினால், வெகுவிரைவில், அன்று நாங்கள் நியமித்த நியமனக் குழு கூடி முடிவுகளை எடுப்போம். அவர்கள் இணங்கி வராவிடின் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை நாம் அறிவிப்போம் - என்றார்.

## தேசிய...

அந்தக் கட்சியின் சார்பில் நேற்று அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், "கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு தம்மை ஒரு தேசியமாக திரட்டி தமிழினத்தின் இனப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணவேண்டும் என்பதை வலியுறுத்தி தமது வாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளருக்கு கணிசமாக வழங்கியிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கின்றபோதும் - பொதுவேட்பாளர் தெரிவின்போதும் பின்னரான தேர்தல் பரப்புரைகளின்போதும் அவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அந்த வகையில் எமது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் காலத்தின் தேவை உணர்ந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி தமிழினத்தின் எதிர்காலம் கருதி செயலாற்றினார்.

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக நாம் பெற்றுக்கொள்ளும் முதலாவது தேசியப் பட்டியல் எம். பி. பதவியை பா. அரியநேத்திரனுக்கு வழங்குவதே அரசியல் அறம் - என்றுள்ளது. (ஐ)

## இலங்கையின்...

செயல்பட்டது. அத்துடன், 13ஆம் திருத்தச் சட்டத்தைத் தொடர்ச்சியாக எதிர்த்து வருபவர்கள். எனவே, அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்", என்று வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், "நீங்கள் இதனை எல்லோரும் இணைந்து - ஒற்றுமையாக கோரவில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலைப்பாட்டை சொல்கிறீர்கள்", என்று கூறினார்.

அவருக்கு பதிலளித்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள், "13ஐ நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்குமாறு நாம் இந்தியப் பிரதமரிடம் கடிதம் மூலம் ஒற்றுமையாகக் கோரியுள்ளோம். ஒரேயொரு (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) தரப்பு மட்டுமே அதில் கையொப்பமிடவில்லை", என்று கூறினர்.

அத்துடன், "மாகாண சபைகளுக்கான தேர்தலையேனும் உடனடியாக நடத்துமாறு அழுத்தம்", கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் இந்தியத் தூதுவர் அவர்களிடம் கேட்டறிந்தார்.

அவருக்கு பதிலளித்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள்,

"தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக எதிர்கொள்வதால் வாக்குகள் சிதறடிக்கப்படும். இதனால், பிரதிநிதித்துவத்தை இழக்காத வகையில் ஒன்றாக போட்டியிடவே விரும்புகிறோம். எனினும், இது உடனடியாகச் சாத்தியமில்லை. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட்டபோது எங்களுக்கு கசப்பான அனுபவங்கள் உள்ளன. இருந்தாலும் அவை தொடர்பில் பேசி கூட்டாகப் போட்டியிட முயற்சிகள் எடுப்போம்.", என்று கூறினர்.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்த இந்த சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடித்திருந்தது. இந்த சந்திப்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் த. சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாவை சேனாதிராசா, ப. சத்தியலிங்கம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## ஓ.எல்....

ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, க. பொ. த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் கூறினார்.

மேலும், 2026ஆம் ஆண்டுக்குள் பரீட்சைகள் தாமதமடைவதை குறைத்து உரிய நேர அட்டைவணைக்கு மாற்றப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஈ.பி.டி.பி. கொழும்பிலும் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 01

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி கட்சி கொழும்பிலும் போட்டியிடும் எனக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை யாழ். தெல்லிப்பளை - மாவைகலட்டி பகுதி மக்களை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதில் வழங்கும் போதே டக்ளஸ் தேவானாந்தா இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு மக்கள் மத்தியில் உரையாற்றிய டக்ளஸ் தேவானாந்தா, தான் மீண்டும் பாராளுமன்றம் செல்வேன் என நம்புவதாகவும், தேர்தலின் பின்னர் ஆட்சியில் இருப்பவர்களுடன் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனும் கட்சியின் கொள்கையின்படி இணைந்து செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# சஜித் கடும் நிபந்தனைகள் கூட்டணி முயற்சி தோல்வி!

### தனி வழி செல்கிறார் ரணில்

கொழும்பு, ஒக். 01

**ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைத்து கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது என தெரியவருகின்றது.**

பொதுத்தேர்தலில் களமிறங்குவதற்கு சஜித் அணியால் முன்வைக்கப்பட்ட கடும் நிபந்தனைகளாலேயே கூட்டணி முயற்சி சாத்தியமாகவில்லை எனக் கூறப்படு கின்றது.

இதனால் பொதுத்தேர்தலில் தொலைபேசிச் சின்னத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிய தரப்புகள் இணைந்து தனித்து போட்டியிடவுள்ளன. இது தொடர்பான அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளியிடப்படும் என தெரியவருகின்றது. (அ)

## ரணில் தலைமையில் பரந்த எதிர்க்கட்சி!

கொழும்பு, ஒக். 01

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்த சகலருடனும் இணைந்து பரந்த எதிர்க்கட்சியொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க கூட்டணிக்கு தலைமை தாங்கினாலும், பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும், தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வரமாட்டார் என்றும் அவர் ஏற்கனவே அறிவித்துள்ளார் என மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார். (அ)

# எமது மீனவர்களையும் கடலையும் ஜனாதிபதியே காப்பாற்றவேண்டும்

### முல்லை கடற்றொழிலாளர் சம்மேளனம்

முல்லைத்தீவு, ஒக். 01

ஜனாதிபதி இலஞ்சம், ஊழல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைப் போன்று எம் மீனவர்களையும், கடலையும் காப்பாற்ற வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் உப தலைவரும், வடமாகாண கூட்டுறவு சங்கத்தின் உப தலைவருமான வி. அருள்நாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிதாக வந்திருக்கும் ஜனாதிபதிக்கு முல்லைத்தீவு மீனவ மக்கள் சார்பில் நல்லமுறையில் நாட்டை கொண்டு செல்வதற்காக வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடற்தொழிலில் அதிகமான வளத்தைக் கொண்டிக்கும் இறால் தொழில் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இத் தொழிலுக்கு இடையூறாக இருந்தது இந்தியன் இழுவைப் படகு.

கடலடி நேரத்தில் நாங்கள் தொழிலுக்குச் செல்லாமல் இருக்கும்போது 50 மேற்பட்ட படகுகளை கொண்டுவந்து எமது வாழ்வாதாரத்தை சுரண்டும் நிலை இருந்தது. இதற்கு முன்னரும் இப்படி நடந்தது.

அதற்கு முன்னாள் கடற்றொழில் அமைச்சரிடம் வைத்த கோரிக்கைக்கு அமைவாக அத்துமீறி நுழைபவர்கள் கைது செய்யப்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

தற்பொழுது கடற்றொழில் அமைச்சராக ஜனாதிபதி இருப்பதானால் நாம் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். காரணம் இந்திய இழுவைப் படகுகள் மட்டுமல்ல, சட்டவிரோத மீன்பிடி தொழில்கள், அங்கீகரிக்கப்படாத தொழில்களை எமது கடற்பகுதிகளில் செய்கிறார்கள்.

இரவில் சுருக்குவலை, டைனமற் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே ஜனாதிபதி இலஞ்சம், ஊழல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றார்.

அதே போன்று எம் மீனவர்களையும்இ கடலையும் காப்பாற்ற வேண்டும். அத்தோடு சட்டவிரோத தொழிலை நிறுத்தி சட்டத்திற்குட்பட்ட தொழிலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ)

## வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவாரா அநுரகுமார?

### அவதானம் செலுத்தும் பவ்ரல்

கொழும்பு, ஒக். 01

புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கொள்கைகள் மற்றும் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராயவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் வருடாந்த மதிப்பீட்டு செயற்பாடு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பவ்ரல் அமைப்பின் அதிகாரிகளை நியமித்துள்ளதாக ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொள்கைகளுக்கு ஏற்ப அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது ஆராயப்படுவதுடன் , அதனை பொதுமக்கள் அறிய வாய்ப்புகள் உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய விடயத்தை மேற்கொள்ள கூட்டு முடிவு என்பது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்காக நிர்வாக சேவையில் அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய தொழிற் குழுக்கள், தொழிற்சங்கங்கள், வணிக சமூகம், சிவில் அமைப்புகள், அனைத்து அரசியல் கட்சிகள் உள்ளிட்ட துறைகளில் உள்ளவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி உடன்பட்டு இலங்கையில் இனங்கள் மற்றும் நாட்டை கட்டியெழுப்ப அவசியமான ஆதரவை வழங்க வேண்டும் என ரோஹண ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டினார்.

புதிய ஜனாதிபதி தேர்தல் சீர்திருத்தங்களை விரைவில் மேற்கொள்வார் என நம்பிக்கை வெளியிடுவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# புதிதாக திறந்த மதுபானசாலைக்கு எதிராக மன்னார் மக்கள் போராட்டம்!

மன்னார், ஒக். 01

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி,எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையை உடனடியாக இடமாற்றக் கோரி நேற்று காலை 9 மணி முதல் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் புதிதாக திறக்கப்பட்ட மதுபானச்சாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

குறித்த மதுபானச்சாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம் , இளைஞர் பயிற்சி நிலையம், தையல் தொழிற்சாலை உட்பட பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி குறித்த மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த மாதம் குறித்த பகுதியை சேர்ந்த மக்கள், மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு, குறித்த மதுபான சாலையை திறக்க அனுமதிக்க வேண்டாம் என கோரி மன்னார் மாவட்ட செயலாளரிடம் மகஜர் கையளித்ததாகவும், தாங்கள் தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் குறித்த மது விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரேதப் பெட்டியுடன் குறித்த பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள், பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று குறித்த மது விற்பனை நிலையம் திறக்கப்படவில்லை.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மக்களுடன் கலந்துரையாடினார்.

எனினும் மன்னார் மாவட்ட செயலாளர் குறித்த பகுதிக்கு வரவேண்டும் என்ற கோரிக்கையை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்தனர்.




மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மக்கள் தமது பிரச்னைகளை மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் குறித்த மதுபானசாலையை பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளரினால் உடனடியாக மூட முடியாது என்றும் மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் ஊடாகவே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும்,இவ்விடயம் குறித்து உடனடியாக மதுவரி திணைக்கள ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும்,குறிப்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து குறித்த மதுபானச் சாலையை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், குறிப்பாக தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பு காணப்படுகின்ற நிலையில் குறித்த மதுபானச்சாலை திறக்கப்பட்டுள்ள விடயத்தை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் மாவட்ட செயலாளரின் வாக்குறுதிக்கு அமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை கை விட்டுச் சென்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org